ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1960/4 - 2016 මාර්තු මස 28 වැනි සඳුදා - 2016.03.28

*1960/4 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/1978* (X)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பிவி 64641 பதிவிலக்கத்தைக் கொண்டதுமான சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றை பெற்றுக் கொண்டு இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும் இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்டதும் முறையே நிரல்* II *இன் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள சுருக்கெழுத்துக்கள் மூலம் குறித்துரைக்கப்பட்டதுமான பட்டங்களை அளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற, உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக ஒரு பட்டமளிக்கும் நிறுவகமாக சவுத் ஏஷியன் இன்ஸ்டிடியுற் ஒப் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் லிமிட்டெட்டை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

*1.* (இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் டெக்னோலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டெட் பட்டமளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுறுமுன்னர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு கீழே தரப்பட்டுள்ளவாறு முறையாக திருத்தப்பட்ட அதனது அமைப்பு அகவிதியை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) அமைப்பு அகவிதியின் நோக்கமொன்றாக உயர்கல்வியை குறித்துரைத்தல் ;

(ஆ) தன்னிச்சையான ஒடுக்குதலுக்கு முன்னர் கம்பனியின் தன்னிச்சையான ஒடுக்குதலை குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அறிவிப்பதற்கான பொறுப்பை எடுத்தல்.

*2.* நிறுவகமானது, பட்டம் அளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட தேதியிலிருந்து பன்னிரண்டு (12) மாதங்கள் முடிவுறு முன்னர் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு பின்வரும் விபரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) இயைபான பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான தகைமை பெற்ற கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியின் ஆட்சேர்த்தல் பற்றிய எண்பிப்பு;

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விழுமியங்களுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட கற்கைக் காலப் பகுதிக்கான கற்கை நிகழ்ச்சித்திட்டம் ;

(iii) இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டங்களிற்கு தேவைப்படுத்தப்பட்ட பாடப் புத்தகங்கள், கையேடுகள், விதந்துரைக்கப்பட்ட வாசிப்புப் புத்தகங்கள் மற்றும் வேறேதேனும் போதுமான கற்கை உபகரணங்கள் என்பனவற்றின் கிடைப்பனவு பற்றிய எண்பிப்பு;

(iv) இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேவைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு மாணவர்களை இயலச் செய்வதற்காக தேவையான எல்லா புத்தகச் சேகரிப்புக்கள் மற்றும் உபகரணங்களுடனான நவீன மயப்படுத்தப்பட்டதும் இடவசதியுடையதுமான நூலகம் பற்றிய எண்பிப்பு;

(v) இயைபான ஆராய்ச்சிகளில் பணியாட்தொகுதியினரை ஈடுபடுத்துவதற்கான தேவைப்பாட்டைக் குறித்துரைத்தல் மற்றும் இலங்கையிலுள்ள சஞ்சிகைகளில் அத்தகைய ஆராய்ச்சிகளை வெளியிடுதல்.

3. நிறுவகமானது, பட்டம் அளிக்கும் அந்தஸ்து வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் (03) முடிவுறு முன்னர் சிவில் பொறியியலில் பொறியியல் விஞ்ஞானமாணி பட்டத்துக்கு தேவைப்படுத்தப்படும் பின்வரும் ஆய்வுகூடங்களைத் தாபித்தல் வேண்டும் :-

(i) மூலப்பொருள் மற்றும் இயக்கெந்திரவியல் ஆய்வுகூடம் ;
(ii) நில அளவையியல் ஆய்வுகூடம் ;
(iii) கட்டமைப்பு பரிசோதனை ஆய்வுகூடம்;
(iv) நிலத்தொழில்நுட்ப ஆய்வுகூடம்;
(v) நீரியியல் ஆய்வுகூடம்.

4. ஆய்வுகூடங்களின் தாபனம் நிறுவகம் ஆனது மாணவர் சேர்ப்பின் முதற்தொகுதியின் இரண்டாம் கல்வியாண்டு முடிவுறு முன்னர் பின்வரும் ஆய்வு கூட வசதிகளை அதிகரித்தல் வேண்டும் என்பதுடன் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும் :-

(i) எந்திரியறிவியல் மற்றும் செயற்கையான நுண்ணறிவு கூடம் ;
(ii) தொழிலியல்சார் தன்னியக்கம் மற்றும் செய்முறைக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம் ;
(iii) மின்னியல், கருவிவழிச் செயலாக்கம் மற்றும் சக்தி முறைமை ஆய்வுகூடம்;
(iv) பொறியியல் வேலைத்திட்டம்.

5. தரவுறுதிப்பாடு இயங்கமைப்பு அமுலாக்கத்தின் எண்பிப்பை அரையாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பூரண அமுலாக்கல் எண்பிப்பானது முதற்தொகுதி ஆட்சேர்ப்பின் ஓராண்டினுள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் *I*<br>பட்டங்கள் | நிரல் *II*<br>பட்டங்களுக்கான சுருக்கெழுத்துக்கள் |
|---|---|
| மெக்காரொனிக்ஸ் பொறியியலில் பொறியியல் விஞ்ஞானமாணி | பிஎஸ்சி (பொறியியல்) (மெக்காரொனிக்ஸ் பொறியியல்)<br>BSc (Eng.) (Mechatronics Eng.) |
| சிவில் பொறியியலில் பொறியியல் விஞ்ஞானமாணி | பிஎஸ்சி (பொறியியல்) (சிவில் பொறியியல்)<br>BSc (Eng.) (Civil Eng.) |

இக்கட்டளையில் ''குறித்துரைக்கப்பட்ட அதிகாரி'' என்பது உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சருக்கான அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

2015, மே 7 ஆந் திகதிய 1913/14 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சவுத் ஏஷியன் இன்ஸ்டிடியுற் ஒப் ரெக்னோலொஜி அன்ட் மெடிசின் லிமிட்டெட் தொடர்பில் மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 25அ என்னும் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையானது இதன்கீழ் சட்டமுறையாக செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்படுகின்றது.

லக்ஸ்மன் கிரிஎல்ல,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2016, மாச்சு 21.

4 - 528

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.